பதினைந்து பத்திரிகையாகப்
பதிவுசெய்யப்பெற்றது.

# இந்துசாதனம்.

(1889)
ஆரம்பிக்கப்பட்டது.

**பத்திரக் கிரயம்.**

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணப் பட்டினம்: | ஆ 1-க்கு | ரூ. 5-60 |
| வெளியூர், இந்தியா: | ,, | ரூ. 9-40 |
| தொடுவாய்ப்பகுதி: | ,, | ரூ. 9-40 |
| தனிப்பிரதி: | | சதம் 6 |

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

# THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

**விளம்பர விகிதம்.**

| | | |
|---|---|---|
| முதன் முறைக்கு:—ஒருகலம் | | ரூ. 9-40 |
| ,, | அரைக்கலம் | ரூ. 5-00 |
| ,, | கால்கலம் | ரூ. 3-15 |
| ,, | ஒரு அங்குலம் | சதம் 65 |

அடுத்த முறைகட்கு ஷை விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—௩௬. } யாழ்ப்பாணம்:—இரத்தாட்சி ஆனிமீ ௩௧௨; (1924 ஜூலை 14) திங்கட்கிழமை. { இலக்கம்—௪.

உ
கணபதி துணை.

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானுர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றேனு
மதம்பூத்தவிநாயகன்றாள்வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக மூந்துயர் தீர்கவே.

## புத்தக விளம்பரம்.

தெல்லிப்பழை பிரமஸ்ரீ வித்துவான் சிவானந்தையரால், இயற்றிய புத்தகங்கள் என்னிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்,

1. தருக்கசங்கிரகம், நியாயபோதினி, பதகிருத்தியம், அன்னம்பட்டீயம், நீலகண்டீயம், சேர்ந்த கட்டுவிலை ரூபா 2 00
2. நம்பி அகப்பொருளுரை ரூபா 1 00
3. இரகுவமிசம் மூலமும் உரையும் முற்பாகம் ரூபா 1 சதம் 50
4. சனிதுதி விலை அணு 1
5. தசகாரியம் அணு 5

ச. செல்லம்ஐயர்,
சிவன்கோவில் வடக்குத்தெரு,
வண்ணார்பண்ணை.

சண்முகநாதன் புத்தகசாலையிலும் பெற்றுக் கொள்ளலாம். (H. 26.)

## "ஸ்ரான்டேர்ட்"
## கொழுக்கியோடுகள்.
## (Standard Tiles)

பின்வரும் நியாயங்கள் பற்றியே நாம் இந்த ஸ்ரான்டேர்ட் ஓடுகளைத் தருவித்து விற்கின்றேம்:—

முதலாவது, இந்தஓடுகள்மிகப்பாரங்குறைந்தனவும்.

இரண்டாவது, இவைகள்நெடுங்காலத்திற்கு நின்று பிடிக்கத்தக்கன.

மூன்றவது, இந்த வட இலங்கையின் தேச சுவாத்தியத்திற்கு இயைந்தஓடுகள்இவைகளேயாம். இந்த ஓடுகள்உஷ்ணகாலங்களிற்குளிர்ச்சியையும் சீதளகாலங்களில் உஷ்ணத்தையும் தரும் தன்மையன.

இந்த ஓடுகளைச் சென்ற மூன்றுவருடகாலமாக நாம் தருவித்து விற்றுவருகின்றேம். இந்த மூன்றுவருட காலத்துள் நாங்கள் ஆச்சரியப்படத்தக்க விதமாக இவை செலவழிகின்றன. மற்றும் ஓடுகளிலும்பார்க்க இது சிறந்ததென்பதற்கு இந்த ஒருநியாயமுமே போதிய சான்றாகும்.

ஓடுகள்யாழ்ப்பாணத்திலும் வல்லுவெட்டித்துறையிலும், பருத்தித்துறையிலும் எங்களிடம் பெறற்பாலன.

S. வீரகத்திப்பிள்ளை.

தந்திவிலாசம்,
"Ruby" வல்லுவெட்டித்துறை

(H. 25.)

## புத்தக விளம்பரம்.

(தபாற்செலவு வேறு).

| | ரூ. | சத. |
|---|---|---|
| பாரதம் ஆதிபருவவுரை | 3 | 25 |
| ஷை சபாபருவவுரை | 2 | 25 |
| ஷை இரண்டும் ஒரே முறையில் | 5 | 00 |
| தொல்காப்பியம் எழுத்ததிகாரம்-நச்சினுர்க்கினியம் | 4 | 50 |
| ஷை சொல். சேனுவரையம் | 4 | 00 |
| அகப்பொருள் விளக்கவுரை (குமாரசுவாமிப்புலவர்பதிப்பு) | 1 | 75 |
| ஷை சிவானந்தையர் பதிப்பு | 1 | 00 |
| இலக்கியச் சொல்லகராதி | 1 | 75 |
| சித்தியார் சுபக்கம் இருவருரை | 5 | 00 |
| ஷை மு. திருவிளங்கம் பதிப்பு 4-பகுதிகள் | 2 | 10 |
| திருவுந்தியார், திருக்களிற்றுப் படியாருரை | 0 | 50 |
| தத்துவப்பிரகாசவுரை | 1 | 75 |
| திருக்குறள் சரவணப்பெருமாளையருரை | 3 | 75 |
| இரகுவமிசவுரை (முதற்பாகம்) | 1 | 50 |
| தருக்கசங்கிரகம் | 2 | 00 |
| ஜாதகபாஸ்கரன் | 3 | 50 |
| இராமாயணநாடகம் | 2 | 25 |
| இராமாயணம் பாலகாண்டம் அரும்பதவுரை | 2 | 00 |

விலாசம்:— மானேஜர்,
சோதிடப்பிரகாசயந்திரசாலை,
(Q. 47.) கொக்குவில், யாழ்ப்பாணம்.

[ESTABLISHED 1909].

## MESSRS. A. S. M. A. KHADER BROTHERS
## Kairul Muslimeen Medical Hall
## PORTONOVO (*SouthArcotDistrict*).

குழிக்கப்போய் சேற்றைப் பூசிக்கோள்வதுபோல்.
வீண் ஆரவாரமான விளம்பரங்களைக் கண்டு மிரண்டுவிடாதீர்கள்.
அடியிற் கண்ட லேகியத்திற்காக ரூபா 1000 இனுமளிக்கப்படும்.

இந்த லேகியம் சாப்பிட்ட 3மணி நேரத்திற்கெல்லாம் சப்த தாதுக்களின் பலத்தையும் வீரிய உற்சாக தத்துவதத்தையு மடைவிக்கச் செய்யவில்லையென்றுவது பரீட்சைசெய்யும் அன்பர்களுக்கு பலனைக் கொடுக்கவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் சொல்லுகிறவர்களின் பணத்தை உடனே வாபஸ் கொடுத்துவிடப்படும்.

அசல் பாகம் சந்தோஷிக்கச் செய்வது

உத்திரவாதமுள்ளது.

## சித்தஜானந்த சிட்டுக்குருவி லேகியம்.

இந்த லேகியம் முற்காலத்து மன்னர்களால் உபயோகித்து வீரியசக்தி குறையாது இல்லற இன்பவாழ்க்கையை யடைந்து புத்திர பவுத்திர சம்பன்னராய் நீடூழி வாழும்பொருட்டே நமது முன்னேர்களால் கூறப்பட்ட பழைய ஏட்டுப்பிரதிகளிலுள்ள ஔஷத பாகங்களிற் சிறந்ததும், இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, அறிவுவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய கலன்களை அடையக்கூடியதுமான ஒப்பற்றஓர்புருஷசஞ்சீவியாகின்றது. மற்றவிபரங்களை நமதுகேட்லாக்கில்காணலாம்.

### லேகியத்தின் முக்கிய குணமாவது.

வாத பித்த சிலேத்ம பிகுதி குறைவால் ஏற்படும் இரத்தக்குறைவு, ஏழுவகை தாதுக்களின் பலஹீனம், அஸ்தி வெட்டைச்சூடு, பிரமேகவெட்டை, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, நீர்சுருக்கு, நீர்எரிச்சல், நீர்தாரை பெருத்தல் ஆகிய ரோய்களையும், நித்திரையில் அடிக்கடி உண்டாகும் தாதுநஷ்டம், நித்திரைப்பங்கம், SPERMATORRHEA, தேகமெலிவு, சதாஇடுப்புவலி, கைகாலசதி, மலச்சிக்கல், பசிமந்தம், தேகத்தில் பலவிடங்களிலும் ஓடித்திரியும் பலவித வாய்வுகள், நெஞ்சுவலி, NERVOUSDISEASES, ஆகிய ரோய்களை சுகப்படுத்தி, புதியமேனியுடன் இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களைப் பெறுவதில் இதைவிடச் சிறந்த மருந்து கிடைப்பது அரிதினுமரிது. இச்சிறந்த அபூர்வலேகியத்தின் ஆச்சரிய குணத்தை உடனேக்குடன் அறியவேண்டியதென்றே ஜனனுகூல நன்மைக்காகவே இதனை மிகவுங் குறைந்த விலைக்கு வெளியிட்டிருக்கின்றேம்.

40 நாள் சாப்பிடும் பெரியடப்பி 1-க்கு விலை ரூபா 8—0—0.
20 நாள் சாப்பிடும் சிறியடப்பி 1-க்கு விலை ரூபா 4—0—0.

வி. பி. தபால் சிலவு பிரத்தியேகம்

முற்பணமனுப்பினுல் V. P. தபால்சிலவு இனும். பினங்கு, சிங்கப்பூர், கிள்ளான், கோலாலம்பூர், பேரா முதலிய பிறதேசவாசகர்கள் மருந்தின் கிரயமும், தபால்சார்ஜ ரூபா 2ம் சேர்த்து முற்பணமனுப்பி மருந்து பெறவேண்டும். ஷையூர்களுக்கு வி. பி. யில் அனுப்பப்படமாட்டாது.

இச்சிறந்த லேகியமானது சிட்டுக்குருவியின் கிருதம் அதாவது ஷைகுருவியின் சத்தால் செய்யப்படவில்லையென்றுவது, அல்லது இந்த லேகியத்தைச் சாப்பிட்டதால் குணமொன்றுஞ் செய்யவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் ரூபிப்பவர்களுக்கு அவர்கள் கொடுத்த மருந்தின் கிரயத்தையும் ரூபா 1000 இனுமாயும் கொடுக்கப்படும். அப்படி ரூபித்தும் இனுமுடையப்பணத்தை கொடுபடாவிட்டால் கோட்டுமூலமாக வசூல்செய்துகொள்ளலாம். அதன்றியும் மற்றக் கம்பெனியாரின் இத்தகையான குருவிலேகியங்களுக்கு இப்படிப்பட்ட ஆச்சரிய குணமுண்டென்றுவது, அல்லது இச்சிறந்த குண பாக லேகியத்தை செய்து காட்டினுலாவது முன் கண்ட இனும் கொடுக்கப்படுமென்பதற்கு உத்திரவாதமளிக்கப்படும்.

Telegraphic Address
Khader Brothers
Porto-Novo.
(Y. 19,)

என் மேல்விலாசம்:—
மெஸ்ஸர்ஸ் ஏ. எஸ். எம். ஏ. காதர் பிரதர்ஸ்,
கைறுல் முஸ்லிமீன் வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை, தென்னுற்காடு ஜில்லா.

குளிர்! குளிர்!

## கம்பளிப் போர்வைகள்.

அசல்கம்பளி மிருதுவானது; நீடித்து உழைக்கக்கூடியது;
குளிருக்கு அடக்கமானது; பலவித கலர்களில் கிடைக்கும்;

1ம் நம். போர்வை விலை ரூபா 11.
2ம் நம். ,, ,, ரூபா 10.
3ம் நம். ,, ,, ரூபா 8 அணு 8.

கே. எஸ். முத்தையா & கம்பனி,
"ஸில்க் ஹவுஸ்" காசி.

(Y. 29.)

4 மாசத்தில் 200 குஷ்டரோகிகள் சொஸ்தமடைந்து விட்டார்கள்!
திமிர், குஷ்டம், தீர்ந்து விட்டன!
மதமதப்புமாரி சொரணையுண்டாகி விட்டன.
தடிப்புகள் மாறிவிட்டன, பத்துகள் மறைந்து விட்டன,
சொரிகள் உதிர்ந்து விட்டன, அரிப்புகள் மாறிவிட்டன,
ரணங்கள் ஆறிவிட்டன,
குன்மம், கிரந்தி, மேகமெல்லாம், தீர்ந்து, விட்டதென்று தினம்
நற்சாக்ஷிகள் வந்தவண்ணமாயிருக்கின்றன.

ரிஜிஸ்டர் செய்யப்பட்டது
அநேக நற்சாட்சிகளும் தங்கமெடலும் பரிசு பெற்று
உலகமெங்கும் புகழ்பெற்ற மருந்துகள்.

25-8-1923-ல் சென்னையில் நடந்த வைத்திய கான்பரன்ஸ் மருந்து வைத்திய கண் காட்சியில் இவர் மருந்துகள் பஸ்ட் கிளாஸ் தேவ ஔஷதங்களென்று தங்க மெடலும் வைத்திய ஆசிரியர் என்று பட்டமும் பெற்றவர்.

எந்த மருந்திலும் தீராத வியாதிகள் இதில் அவசியம் தீரும். உத்தரவாத முள்ளது. குணம் இல்லை என்பவர்களுக்கு பணம் திரும்பக்கொடுக்கப்படும். வைத்திய சாஸ்திரத்தில் மகா நிபுணர்: முப்புவைக் கண்டுபிடித்தவர்.

## தாம்பர பஸ்பம்.

சகல வியாதிக்கும் கைகண்டது.
மூப்புவினுல் தளுக்கற நீற்றியது. களிம்பற்றது.
வாந்தி முதலிய கெடுதிகள் ஒன்றும் செய்யாதது பத்தியமில்லை.
வியாதிகளை விபரமாய் எழுதவும்.
உங்கள் வியாதிகளை மறுமுறை திரும்பிவராமல் நிவர்த்திக்கும் வல்லமை யுடையது.

20-வருஷ காலமாய் அனேக வியாதிகளுக்குக்கொடுத்து அனுபவமுள்ளது. இந்த மருந்தினுல் தீராத வியாதிகள் கிடையாது. சகல வியாதிகளுக்கும் இந்த ஒரே மருந்து போதும்! ஒருமருந்துக்கும் வசப்படாத வியாதிகளெல்லாம் இந்த மருந்தில் தீருவது வெகு ஆச்சரியமாக இருக்கிறது. திடீரென்று சம்பவிக்கக் கூடிய ஆபத்தான சகல வியாதிகளையும் யாவரும் பிரமிக்கும்படி வெகுசீக்கிரத்தில் நிவர்த்திக்கும். சீக்கிரத்தில் குணப்படுத்துகிறதை பார்க்கும்போது மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுக்கிறது. ஜுரம் 64-ஜன்னி 13-தோஷம் 7-ம் ஜாஸ்தியாகி எந்த மருந்திலும் தீராத சமையம் உட் கொண்டால் அந்த க்ஷணமே நிறுத்தும் 3-நாள் மருந்தே போதும். வெகு சீக்கிரம் பிரமிக்கும்படி வாய்வு 300-ம் இதில் அவசியம் தீரும்; வைத்தியர் தேவையில்லை. மேக நீரினுல் பொறுக்கமுடியாத கைகால் குடைச்சலை உடனே நிறுத்தும். குறைநோய் சம்பந்தமான ஆராதமணங்களும், விரல்கள் அழுகிப்போயிருந்தாலுஞ்சரி அந்தமட்டில் புண்கள் ஆறிவிடும். பின் புண்ணுகாது. எந்த மருந்திலுந் தீராத எவ்வளவு நாள்பட்ட கிரந்தி, புண் புரைகளும் இதில் அவசியந் தீரும்; வெட்டை, மூத்தி மொழிகளில் சூலை, வீக்கம், வலி, கை கால் குடைச்சல் ஊரந்தி, நரைச்சல், மேக ஊரல், பத்து, அரிகிரந்தி, தடிப்பும் நரம்பு பிடித்து கை காலை முடக்கிவிடும் மேக வியாதிகளும் இதில் அவசியம் தீரும். ஜுரம், 64 ஜன்னி, 13 தோஷம், 7 வாயு, 26 மேகம், 21 குஷ்டம், 18 சூலை, 18 கிரந்தி, 6திமிர், 10 குன்மம், 8 இருமல், 8 க்ஷயம், 6 காசம், 8 மூலம், 9 பவுத்திரம், அரையாப், 8 கண்டமாலை, 9 கிராணி, 6 விஷநீர், 4 விக்கல், 8 வெடிப்பு ரணம், வெள்ளை, வெட்டை, கந்திமேகம், எரிச்சல், கடுப்பு, நீரடைப்பு, கல் அடைப்பு, ஆறுதபுண், புரை, குழிபுண், புற்றுக்கட்டி, பிளவை, காக்கைவலிப்புகள், பக்கவாதம், நடுக்குவாதம், மயிமதப்பு, சூதகவாய்வு, வயிற்றுவலி முதலியசகலவித கர்ம வியாதிகளும் கண்டிப்பாய்த் தீரும். அனுபவத்தில் கை கண்ட அருமையான மருந்து. 80 வேளை ரூபா 40; 40 வேளை ரூபா 20; 20 வேளை ரூபா 10; ஏழைகட்கு பாதி விலை.

வைத்திய ஆசிரியர்.
R. M. K. வேலுசாமிபிள்ளை,
சித்த ஆயுள்வேத வைத்யசாலை, பழனி.

(Y. 31.)

# இந்துசாதனம்

யாழ்ப்பாணம்:—இரத்தாட்சி௵ ஆனி௴ 31உ திங்கட்கிழமை.

## புராண படனம்.

சிவ புராணங்களை விதிப்படி படித்தலும் அவற்றிற்கு அர்த்தஞ் சொல்லுதலும் அவற்றை ஆசாரசீலராய் மெய்யன்போடு கேட்டலும் மேலான புண்ணியங்களாகுமெனச் சைவநூல்கள் கூறும்.

"வேட்டுறிற் சிவபதவியேவேட்டுறவிரும்பிக், கேட்டுறிற் சிவபுராணமே கேட்டுறவினைசொண், டாட்டுமன்பதை யீறுகண் டந்தகன்றாதர், வீட்டு முன்னரே சிவத்தினில் விருப்புற வேண்டும்."—உபதேசகாண்டம்

சிவபுராணம் படித்துப் பொருள் சொல்லுதற்கான இடங்கள் தேவாலயம், திருமடம், நதிக்கரை, குளக்கரை, திருநந்தனவனம், யாகசாலை முதலிய சுத்த ஸ்தானங்களாம். திருக்கோயிலிலே சிவபுராண மண்டபம் அமைப்பித்து, அதிலே சிவபுராண புத்தகத்தைப் பீடத்தின் மீது வைத்து, நாள்தோறும் விதிப்படி பூசை செய்துகொண்டுவரின், அது நூறுகோடி சிவலிங்கப் பிரதிட்டைக்குச் சமமாகுமென உபதேசகாண்டங் கூறும். சிவபுராணம் படித்துப் பொருள் சொல்லுதற்கு அதிகாரிகளாவார் அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் என்னும் நான்குவருணத்துட்பட்டவராய், உடற்குற்றங்களற்றவராய், இலக்கண இலக்கியங்களை நன்கு பயின்றவராய், சந்தியாவந்தனம் முதலிய நித்தியகருமங்களைத் தவறாமல் விதிப்படி சிரத்தையோடு செய்பவராயுள்ளவராவர்.

சிவபுராணம் சுபதினத்திலே சுபமுகூர்த்தத்திலே ஆரம்பித்தல்வேண்டும். ஆரம்பிக்குந் தினத்திலும், முடிக்குந் தினத்திலும், திருக்கல்யாணம் முதலிய சுபசரித்திரங்களைப் படிக்குந் தினத்திலும், சிவபுராண மண்டபத்தைக் கோமயத்தினாலே மெழுகி, கமுகு வாழை கரும்பு என்னும் இவைகளை நாட்டி மேற்கட்டி அமைத்து, பூமாலை தூக்கி அலங்கரித்தல் வேண்டும். சிவபுராண போதகர் தினந்தோறுந் தோய்த்துலர்ந்த வஸ்திரந் தரித்து, சந்தியாவந்தனமுடித்து, திருமுறையைப் பீடத்தின்மீது வைத்து, சந்தனம் புட்பம் தூபதீபம் முதலியவை கொண்டு பூசித்து வழிபட்டு ஆசனத்திருந்துகொண்டு புராணம் போதித்தல்வேண்டும். அவர் அங்கே எவரையும் அஞ்சலிசெய்தலாகாது.

புராணங் கேட்போர் நாள்தோறும் ஸ்நானஞ் செய்து தோய்த்துலர்ந்த வஸ்திரந் தரித்து நித்தியகருமம் முடித்து, புத்தகபூசை முற்றியவுடன் சிவபுராண போதகரைக் கிழக்குமுகமாக ஆசனத்திருத்திச் சிவபெருமானாகப் பாவித்துச் சந்தனம் புஷ்பம் முதலியவைகளினாலே பூசித்து வழிபட்டு, சுற்றத்தார் சிநேகர் முதலானோருடன், சித்திரப்பாவைபோலிருந்து பய பக்தியோடு புராணங் கேட்டல் வேண்டும். அதன்பின்னர் தத்தம் இல்லத்திற்கு மீண்டு அங்கே சிவனடியாருடன் அமுதுசெய்தல் வேண்டும். சிவபுராணங் கேட்டோர் தாஞ் செய்த தீவினையனைத்தும் நீங்கப்பெற்று மேலான கதியை யடைவர்.

"கள்ளுயிர்த்த பூங்கொன்றை யானருட் சிலகாதை, எள்ளில்சிந்தையால் விதிமுறை பிணிது கேட்டுவந்து, வெள்ளவார் சடையெம்பிரான்திருவருள் விளைவித், தெள்ளருங்கதிபுகுந்தவர்க் கிலக்கமாரிசைப்பார்" என உபதேசகாண்டங் கூறும்.

இவ்வியாழ்ப்பாணத்திலேயுள்ள சிவாலயம், தேவியாலயம், விக்கினேஸ்வராலயம், சுப்பிரமண்யஆலயம், வீரபத்திராலயம், வைரவாலயம் முதலிய எல்லா ஆலயங்களிலும் முன்னாளிற் கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற்புராணம், திருவாதவூரடிகள்புராணம், உபதேசகாண்டம், திருச்செந்தூர்ப்புராணம், மயூரகிரிப்புராணம், சிவராத்திரிபுராணம் என்னும் இப்புராணங்கள் வருடந்தோறுங் கிரமமாக விதிப்படி படித்தும் பயன்சொல்லியும் கேட்கப்பட்டும் வந்தன. இங்குள்ள வைஷ்ணவ ஆலயங்களில் பாரதம், ஏகாதசிபுராணம் என்னும் இவைகள் படிக்கப்பட்டும் கேட்கப்பட்டும்வந்தன. இங்குள்ள ஆண்களும் பெண்களும் ஆசாரசீலராய் விரதமிருந்து சிவ புராணங்களைக் கேட்டுவந்தார்கள். திருக்கல்யாணம் முதலிய விசேஷசரித்திரங்கள் படிக்கப்படும்போதும், புராண படன ஆரம்பத்திலும் முடிவிலும் விசேஷ பூசை வழிபாடு அன்னதானம் முதலியன செய்யப்பட்டு வந்தன. திருமடங்களிலும் இவ்வாறு புராணபடனம் நடைபெற்றுவந்தது. வண்ணார்பண்ணையிலுள்ள கந்தமடம் எனப்படும் திருமடம் கந்தபுராணபடனம் கிரமமாக நடைபெறும் பொருட்டு முன்னிருந்த புண்ணியசீலர்களால் அமைக்கப்பட்டது. இந்த மடத்தின் பெயராலேயே வண்ணார்பண்ணையிலுள்ள அந்தப் பிரிவு கந்தமடம் என வழங்குகின்றதென்பர். ஆனாற் காலகதியில் இந்த மடச் சொத்துப் பிறரார் கவரப்பட, புராணபடனமும் நடவாதொழிந்தது. இப்பொழுது சில புண்ணியசீலர்கள் தலையிட்டு இத் திருமடத்தைப் பழையநிலையில் வைத்தற்கு முயற்சி செய்கின்றார்களெனவறிந்து மகிழ்ச்சியுறுகின்றேம். நிற்க,

யாழ்ப்பாணத்திலே விசேஷமாகக் கந்தபுராண படனமே நடைபெற்றுவந்தது. இக்கந்தபுராணபடனம் நடைபெற்று வந்தமையினாலேயே, பறங்கியர் ஒல்லாந்தர் 130 வருடங்களாகச் சமயஹிம்சை செய்தகாலத்தும் சைவசமயங் குன்றாதிருந்ததென்றும், பஞ்சம் பெருநோய் கொள்ளைநோய் முதலியன நிகழாதிருந்ததென்றும், சைவ சித்தாந்த சமயமும் சுப்பிரமணியபக்தியும் விருத்தியடைந்து வந்ததென்றும், நல்லொழுக்கந் தழைத்ததென்றும் காலங்கண்ட முதியோர் சொல்லக் கேட்டிருக்கின்றேம். ஆனால் இக்காலத்தில் நவீன நாகரீக மேலீட்டினாலும் ஆங்கிலக் கல்வி விருத்தியினாலும் விபரீதம் அதிகரித்தமையினாலும் போலும் ஆலயங்களிலும் திருமடங்களிலும் புராணம் படிப்பாரும் கேட்பாரும் விதிப்படி விரதமனுட்டிப்பாரும் குறையலாயினர். இங்குள்ள எத்தனையோ ஆலயங்களில் இக்காலத்தில் தாசியர் நடனத்தின்பொருட்டும் வாண வேடிக்கையின்பொருட்டும் அதிக பொருள் செலவிட்டு உற்சவங்கள் நடாத்துகின்றனரேயன்றிப் புராண படனம் நடத்தல்வேண்டு மென்பதைச் சிந்திப்பார் சிலரினுஞ் சிலரேயாவர். இவ்வாறு புராணபடனஞ் செய்தல் குறைவுற்றமையினாலேயே இக்காலத்தில் இங்கே பஞ்சமும் புதிய கொடிய நோய்களும் விபரீதக் கொள்கைகளும் பிற தீமைகளும் மலியலாயின. இப்பொழுதும் நாட்டுப்புறத்துள்ள சில ஆலயங்களிற் கந்தபுராணப் படிப்பு வருடந்தோறும் நடைபெற்று வருகின்றது. அங்குள்ளவர்கள் அதனால் வரும் நற்பயனை அனுபவித்து வருகின்றனர். நமது சைவசமயம் ஓங்கவேண்டுமாகில், நம்மைப் பீடித்த பஞ்சமும் கொடிய பிணிகளும் விபரீத கொள்கைகளும் அறவே யகலவேண்டுமாகில், நல்லொழுக்கம் விருத்தியாகவேண்டுமாகில், செந்தமிழ் வளரவேண்டுமாகில், இல்லறதருமம் செவ்வனே நடைபெறவேண்டுமாகில் நம்மவர்கள் தொன்மைபோல இங்குள்ள எல்லா ஆலயங்களிலும் திருமடங்களிலும் சிவபுராண படனத்தை ஆரம்பித்து விதிப்படி கிரமமாகப் படித்தும் கேட்டும் வருவார்களாக.

## தயவு இருக்கவேண்டும்.

"நடையும் நடைப்பழக்கம் நட்புந் தயையும், கொடையும் பிறவிக் குணம்" என்று எங்கள் மூதாட்டி சொன்னபிரகாரம் தயவு ஒருவரிடத்தில் இயல்பாக இருத்தலன்றிப் பழக்கத்தால் வாராததெனினும், கல்வியறிவினாலும் பெரியோர் சகவாசத்தினாலும் இந்த அரிய குணம் ஒருவாறு பெறத்தக்கதாக விருக்கின்றது. அந்நியராய் இங்கு வருபவர்களை உபசரித்தல், வேற்றூரிலிருந்து நடந்துவருவார் வழிதெரியாமற் சங்கடப்படும்பொழுது "இப்படிச் செல்லவேண்டும்" "அப்படிப் போகவேண்டும்" என்று வழிகாட்டிவிடுதல், வீடு தெரியாதார்க்கு இவ்வீடென்று அழைத்துக்கொண்டுபோய்க் காட்டிவிடுதல் முதலிய இந்தத் தயவான குணங்கள் யாழ்ப்பாணத்தவர்களிடத்தில் இயல்பாகக் குடிகொண்டிருந்தன. ஆனால் இக்காலத்தில் இந்த நற்குணம் இங்கே தேய்ந்துபோகக் காண்கின்றேம். அரசாங்க உத்தியோகங்களில் அமர்ந்திருக்கும் யாழ்ப்பாணத்தவருட் பலர் தாங்கள் கருமம் பார்க்கும் காரியஸ்தலங்களுக்கு யாராயினும் கருமார்த்தமாக வந்துவிட்டால், அவரைக் கண்டமாத்திரத்தே எதிர்சென்று, வந்த காரணமென்னவென்று விசாரித்து அவர்கள் கருமத்தை இயன்றவரையில் துரிதமாக முடித்துக் கொடுத்துவந்தனர். ஆனால் இக்காலத்தில் அப்படிச் செய்தல் அரிதாய்விட்டது. யாராயினுஞ் செல்வஞ் செல்வாக்குடையவர், காற்சட்டை தலைப்பாகைதரித்தவர்களாயுள்ளார் சென்றாலே நம்மவர் அப்படி உபசரிக்கின்றார்களன்றி ஏழைகள், விஷயந் தெரியாதவர்கள் சென்றால் அங்ஙனம் உதவிசெய்கின்றார்களில்லை. அவர்களுடன் இவர்கள் ஆங்கிலம் பேச, அவர்கள் பயந்து விழிக்கின்றார்கள். இந்தத் தீய குணத்தை இவர்கள் யாரிடமிருந்து இரவல் வாங்கினார்களென்பது எமக்குப் புலப்படவில்லை. தங்களுக்கு மேற்பட்ட உத்தியோகத்தராயுள்ள அயிரோப்பியர் பறங்கியர் சிங்களர்களாகிய இவர்கள, கீழ் உத்தியோகத்தர்களாகிய தங்களுடன் ஊடாடும் மாதிரியைப் பின்பற்றியே நம்மவர் தங்களிடத்து வருஞ் சனங்களோடும் கடினமாக ஊடாடத் தலைப்படுகின்றனரென நினைக்கின்றேம். சில உத்தியோகஸ்தானங்களிற் சென்று கருமம் அறியாதார் யாரும் அந்த உத்தியோகத் தெய்வங்களை வணங்கி, "ஐயா, இன்னாரை எங்கே காணலாம், இன்ன கருமத்தை யார்மூலமாக முடிப்பித்தல்வேண்டும்" என்று வினவினால், இந்தக் கீழ் உத்தியோகத்தர் அவர்மேல் நாய்போல் விழுந்து முசுறுபோற் கடிக்கப்பார்க்கிறார்கள். சில சமையங்களிற் "பியனை"யும் கூப்பிட்டு அதட்டுவிக்கப் பார்க்கிறார்கள். ஐயோ, "ஈதல் அரிதெனினும் இன்சொலினும் நல்கூர்தல், ஓகோ கொடிது கொடிதப்பா" என்றாற்போல, யாதும் உதவிதான் செய்ய இஷ்டமில்லாவிட்டாலும் இவர்கள் ஒரு இனிய வசனம் பேசவொண்ணாதா? இன்சொல்லுக்கும் பஞ்சமா? இவர்களுக்கு இன்சொற் பேசிப் பழக்கமில்லையென்றால், இவர்கள் தங்கள் மேலதிகாரிகளோடு பேசும் இரப்புரைகளிற் சிலவற்றை இந்த ஏழைகளோடு பேசும்போது இன்சொல்லாக மாற்றிப் பேசிவிடலாமே. சில உத்தியோகத்தர்களிடஞ்சென்று ஏதுமொன்று கேட்டால் பழைய வைரமுடையார்போல் மௌனஞ் சாதிக்கின்றார்களே. வாய்திறந்து வார்த்தை சொன்னால் முத்தஞ் சிந்திவிடுமோ? உத்தியோகஸ்தானங்களுட் புகைரதஸ்தானமே எல்லாவகையான மனுஷர்களும் பெரும்பான்மையும் ஊடாடும் இடமாம். புகைரதஸ்தானங்களிலேயே உத்தியோகத்தர்களின் தயவு பிரயாணிகளுக்கு அதிகமாக இருத்தல் வேண்டும். மருதானை, பொல்காவலை, நாவலப்பிட்டி, நனுஓயா முதலிய பெரிய புகைரத ஸ்தானங்களில் பிரயாணிகள் எந்த வண்டியில்ஏறினால் எங்கே போகலாமென்பதை அறியாமல் சங்கடப்படுகின்றார்கள். பிரயாணச்சீட்டுகளைப் பெற்றுக்கொள்ளுதற்குப் பெரிதும் கஷ்டப்படுகின்றார்கள். விருத்தர்கள் சிறுவர்கள் முதலானோர் முந்திப் புகுந்து பிரயாணச் சீட்டு எடுத்தற்குக் கஷ்டப்படுகின்றார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு இந்த ஸ்தானங்களில் உத்தியோகத்தராயிருந்த யாழ்ப்பாணத்தவர் முன்னே பெரும் உதவிசெய்துவந்தார்கள். ஆனாற் காலகதியில் இவர்களும் அயிரோப்பியர் பறங்கியர் சிங்களரைப்போற் பராமுகமாயிருக்கத் தலைப்பட்டுக்கொண்டனர். பிரயாணஞ் செய்த சில ஏழைகள் நமது யாழ்ப்பாணத்து உத்தியோகத்தர்களைப்பற்றி இவ்விஷயமாக முறையிட்டதைக் கேட்டிருக்கின்றேம். வாலிப உத்தியோகத்தர்கள் எங்கள் முன்னோரின் பெருங்குணத்தை ஒருபோதும் மறந்துவிடவொண்ணாது. சினத்தில் அரிந்த மூக்கு, சந்தோஷம் வந்தவிடத்துப் பொருந்தப்போவதில்லை. அவ்வாறே இந்த அரிய குணத்தை நாங்கள் ஒருமுறை கைவிடுவோமாகில் இது பின்னர் மீண்டுவருமோவென்பது சந்தேகம். இப்பொழுது புகைரதத் தலைவராகவிருக்கும் மிஸ்டர் T. E. டற்றன் தங்கீழுள்ள உத்தியோகத்தர்களுக்கு ஒரு சுற்றுநிருபம் விடுத்துத் தமது பெருந்தன்மையையும் உத்தியோகத்தர்களின் பராமுகத்தையும் இனிது காட்டியிருக்கின்றனர். அதனை இங்கே மொழிபெயர்த்துத் தருகின்றேம்.

"புகைரதத்திற் பிரயாணஞ் செய்வோருக்குப் புகைரத உத்தியோகத்தர் தங்களால் இயன்ற உதவி செய்வதில்லையென்னும் முறைப்பாட்டை நான் பலமுறைகளிற் கேட்டிருக்கின்றேன். ஆதலால் இனிமேலாவது பிரயாணிகளுக்கு இயன்ற சகாயஞ் செய்யும்படி புகைரத உத்தியோகத்தர்கட்குத் தெரிவிக்கின்றேன். இந்த விஷயத்தில் மற்றுந் தேசங்களிலுள்ள புகைரத உத்தியோகத்தரைப்போல் இங்குள்ள உத்தியோகத்தரும் முற்பட்டு வருவார்களென நினைக்கின்றேன். புகைரதப் பிரயாணிகள் தங்களுக்குத் தெரியாத விபரங்கள் எவற்றையேனும் கேட்டால் உத்தியோகத்தர்கள் அவற்றைச் சொல்லி விளக்கி வைப்பது பெரிய உதவியாகும். பிரயாணிகளுக்கு உதவிசெய்வதற்கு எந்தநேரத்திலும் சந்தர்ப்பம் வாய்க்காதென்பது மெய்யாயினும், கேட்கிறவர்களுக்கு இயன்ற விடை சொல்லிவிடுதலாற் பெரிதும் நன்மையுண்டென்பது மெய். உத்தியோகத்தர் சிறிது சிரமம் பாராட்டுதல்வேண்டும். சிற்சிலசமையங்களில், உத்தியோகத்தர்கள் தயவுகாட்டுவது சங்கடமாயிருந்தாலும் மனமுண்டானால் இடமுண்டு என்றபிரகாரம், தயவுகாட்டவேண்டுமானாற் காட்டலாம். விசேஷமாக ஏழைகளுக்கும் கருமந் தெரியாதவர்களுக்கும் பெண்களுக்குமே புகைரத உத்தியோகத்தர்கள் தயவு காட்டுதல்வேண்டும். ஏனென்றால் இவர்கள் பிரயாணகாலத்திலே தங்கள் கருமத்தைத் தாங்கள் செய்யத் தெரியாமல் இடர்ப்படுகின்றனர்".

## இந்தியாவின் தற்கால நிலைமை

[இந்திய சனத்தலைவருள் ஒருவராகிய ஸ்ரீமாந் கிருஷ்ணசாமி சர்மா அவர்கள் வண் வேங்கடேசப் பெருமாள் கோவிலிற் செய்த உபந்நியாசத்தின் சுருக்கம்:—]

யாழ்ப்பாணத்தவர்களாகிய நீங்கள் இந்தியாவின் தற்கால அரசியல் நிலைமையைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். இங்குள்ள மாணாக்கர் இந்தியாவைப்பற்றிப் பூமிசாஸ்திரத்திற் படித்திருப்பார்கள். இந்தியாவிற்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையே இரண்டாயிர வருட காலமாக நெருங்கிய சம்பந்தமிருந்துவருகின்றது. ஒரு நீரிணை (பாக்கு நீரிணை) இந்தியாவையும் இலங்கையையும் பிரித்தாலும், நாங்களும் நீங்களும் ஒரே மாதாவின் புத்திரர்போற் சகோதரத்துவம் பூண்டு ஒரே நாகரிகத்தை அனுசரித்துக்கொண்டு வசித்துவருகின்றோம். நாங்கள் எங்கள் தாய்நாட்டிற்குச் செய்யவேண்டிய கடமைகள் இன்னின்ன என்பதை யுணர்தல்வேண்டும். இந்த ஆபத்தான காலத்தில் எங்கள் தேசத்தின்நன்மையின்பொருட்டு உழைத்தலை யொழித்து அதற்குத துரோகஞ் செய்ய வொண்ணாது. இந்தச் சந்தர்ப்பத்திலேயே எங்கள்நாட்டின் ஈடேற்ற விஷயமாக நாங்கள் அதிக சிரமத்தோடு தொண்டு செய்தல் வேண்டும். நாங்கள் ஏனைய சாதியினர்போல் புதிதாக நாகரிகமடைந்தவரல்லேம். உலகத்திலே எங்கள் சீர்திருத்தமே மிகப்புராதனமானது. எங்கள் ஸ்தாபனங்களும் கல்வி விருத்தியும் பத்துலக்ஷம் வருடங்கட்கு முந்தியவைகளாகும். அயிரோப்பாவிலே மனுஷரை வைத்துச் சிகிச்சை செய்யும் வைத்தியசாலைகள் ஸ்தாபிக்கப்படுதற்கு எவ்வளவோ காலத்திற்கு முந்தி இந்தியாவில் மனுஷருக்கு மாத்திரமன்றி விலங்கு பறவைகள் ஊர்வன முதலிய சகல சீவபிராணிகட்கும் வைத்தியசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டிருந்தன. எங்கள் கிராமங்களில் "பஞ்சாயத்" என்று சொல்லப்படும் கிராம சுயபரிபாலன சங்கங்கள் பூரணமான நிலையிலிருந்தன. இந்தப் "பஞ்சாயத்" எனப்படுஞ் சங்கங்களின் விசேடத்தைப்பற்றி அயிரோப்பியரும் புகழ்ந்துள்ளனர். இப்போதுள்ள பட்டினபரிபாலன சங்கங்களும் கிராமபரிபாலன சங்கங்களும் "பஞ்சாயத்து" எனப்படுஞ் சங்கங்கள்போற் பூரணமுடையவையல்ல. உற்றுநோக்கின் இந்தப் "பஞ்சாயத்" எனப்படுஞ் சங்கங்களைப் பின்பற்றியே அயிரோப்பியர் சுயபரிபால முறைகளை அனுசரிக்கின்றனர். இத்துணைப் பூரணமான புராதன சீர்திருத்தத்தை யடைந்திருந்த தமிழர்களாகிய நாங்கள் இப்பொழுது இருக்கும் ஸ்திதி யெப்படிப்பட்டது? இந்தியாவிலே தமிழர்களே மிகவுங்கேவலமான நிலையிலிருக்கின்றனர். இந்தியாவிலுள்ள மற்றுஞ் சாதியினர் தங்கள் சாதிநலத்தின் பொருட்டும் தேச ஈடேற்றத்தின் பொருட்டும் அதிகம் உழைக்க தமிழர்களாகிய நாங்கள் மாத்திரம் யாதும் பிரயத்தனமின்றி வாளா விருக்கின்றேம். எங்கள் புராதன பாஷையாகிய தமிழை விருத்தி செய்கின்றிலேம். கம்பர் திருவள்ளுவர் மாணிக்கவாசகர் கூன்பாண்டியன் ராஜராஜசோழன் குலோத்துங்க சோழன்என்னும்பெரியாரின்வழித்தோன்றல்களாகிய எங்கள் ஒவ்வொருவர்நெற்றியிலும் அடிமைத்திறம் எழுதப்பட்டிருக்கின்றது.

இந்தியாவிலே பண்டைக்காலத்தில் நாலந்தை உஜ்ஜேனி முதலிய இடங்களிற் சர்வகலாசங்கங்கள் விளங்கின. இந்தச் சர்வகலாசங்கங்களைச் சேர்ந்த கரு சர்வகலாசாலைகள் இருந்தன. வானசாஸ்திரம் கணிதம் தத்துவசாஸ்திரம் யோகசாஸ்திரம் கலைஞானம் சிற்பசாஸ்திரம் முதலிய கல்வித் துறைகளெல்லாம் இந்தச் சர்வகலாசாலைகளிற் பயிற்றப்பட்டன. தேசம் முழுவதும் குருகுல ஆச்சிரமங்கள் மலிந்திருந்தன. சனங்களின் ஈடேற்றத்தின்பொருட்டு மகாஞானிகளே அக்காலத்தில் ஆசிரியர்களாகவிருந்து கல்வி பயிற்றி வந்தார்கள். எல்லோரும் படித்தவர்களாயிருந்தார்கள். படிக்கவேண்டிய பராயத்திலே ஒவ்வொரு பிள்ளைகளும் தவறாமற் படித்து வந்தார்கள். இராஜராஜசோழன் காலத்தில் ஒவ்வொரு கிராமத்திலுள்ள பிள்ளைகளும் வேதனமின்றிக் கல்வி பயின்றுவந்தனர். எங்கள் மூதாதையர் சுயராச்சியம் வகித்திருந்த காலத்திலே, சுதேசமன்னரும் சக்கரவர்த்திகளும் பரிபாலஞ்செய்த காலத்திலே எங்

கள் தேசம் அடைந்திருந்த உந்நத பதவி இதுவாகும். ஆனால் இப்பொழுது தமிழர்களாகிய எங்களது நிலை எவ்வாறிருக்கின்றது? இந்தியாவிலே இப்பொழுதுள்ள 315000000 சனங்களுள் நூற்றுக்கு 81 பேர் விகிதம் கல்வியறிவில்லாதவர்களாயிருக்கின்றார்கள். ஆனால் ஜப்பானில் 1922-ம் ஆண்டில் நூற்றுக்கு 87 பேர் விகிதம் படித்தவர்களாய்க் காணப்பட்டனர். 19 வருடகாலம் மாத்திரம் அமரிக்கரின் பரிபாலனத்தின்கீழிருந்த பிலிப்பைனின் தீவில் எல்லோரும் படித்தல்வேண்டுமென்ற பிரமாணம் விதிக்கப்பட்டிருக்கின்றது. அங்கே, 1923-ம் ஆண்டில் நூற்றுக்கு 62 பேர் விகிதம் படித்தவர்களாகவிருந்தார்கள். அமெரிக்காவில் நூற்றுக்கு 87 பேர் விகிதம் கல்வி கற்றவர்களாயிருக்கின்றனர். இங்கிலாந்தில் 98 பேர் விகிதம் படித்திருக்கின்றனர். இந்தியாவில் நூற்கு 19 பேர் விகிதம் படித்திருக்கின்றனர். இப்படியிருக்கவும் இந்தியாவிலே தாங்கள் போதிய கல்வி யூட்டிவருவதாக ஆங்கிலர் புகழுகின்றனர். இந்தியாவிலே கல்வி விருத்தியின்றிக் கிடத்தற்குப் பொறுப்பாளர் அரசினரல்லாமல் வேறு யார்? 1921-ம் ஆண்டில் ஸ்ரீமான் கோகலே இந்தியாவிலே சனங்களெல்லோரும் வேதனமின்றிக் கட்டாயம் படித்தல்வேண்டுமென்ற பிரமாணத்தை அரசினர் விதிக்கவேண்டுமென வாதாடிய போது இந்திய அரசாங்கத்தார் அப்படிச் செய்வதற்குப் பணமில்லையென்று சொல்லிவிட்டனர். சனங்களுக்குக் கல்வியூட்டப் பணமில்லையாம். ஆனால் இந்திய வருவாயிற் பாதியாகிய 62½-க் கோடி ரூபா இராணுவத்தின் பொருட்டுச் செலவிடுவதற்குப் பணமிருக்கின்றதாம்.

இனி, இந்தியாவிலுள்ள சனங்களின் சுகாதாரத்தைப் பாருங்கள். முன்னொரு போதுமில்லாத புதிய நோய்கள் வாத்தலைப்பட்டுக்கொண்டன. 'பிளேக்'கெனப்படும் கொள்ளைநோய், 'இன்வுளுவென்ஸா' எனப்படும் வாதசுரம் முதலிய புதிய கொடிய பிணிகள் முற்காலத்தில் இந்தியாவில் அறியப்படாதன. இவைகள் அங்குள்ள சனங்களை இலட்சக் கணக்காக வாரிச்செல்கின்றன. இப்படியிருக்க, அரசினர் சுகாதாரத்தைப் பேணுகின்றோமென்று சொல்லுதல் முடியுமா? சுகாதார பரிபாலனம் பேரளவில் மாத்திரமன்றிக் காரியத்தளவில் ஏதுமுண்டா? மரண விகிதத்தை ஆராய்ந்துபாருங்கள் அமெரிக்காவில் ஒருமனுஷனுடைய சராசரி வயசு 61; இங்கிலாந்தில் 57; ஜப்பானில் 49; இந்தியாவிலெனிலோ 21½ ஆகும். மனுடர்க்கு வயசு 100 என்று சாஸ்திரங்கள் கூறுகின்றனவே. இந்தியர்கள் மாத்திரம் இப்படி அற்ப ஆயுளை அடையவேண்டிய காரணம் என்ன? வறுமை காரணமாகவும் பிணி காரணமாகவுமே நாங்கள் இந்த நிலையிலிருக்கின்றோம். எங்களுடைய சுத்த வீரர்களை இகழ்ந்துவிட்டோம். பூர்வத்தில் எங்கள் சாதியாரிடத்திற் பல வீரர்கள் விளங்கினர். ஆனால் இப்பொழுது பெலனற்ற சிறிய மனுஷர்களே காணப்படுகின்றனர். நாங்கள் கண்ணிருந்தும் பார்க்கின்றிலேம்; காதிருந்துங் கேட்கின்றிலேம்.

பிருத்தானியர் தங்கள் காலத்தில் இந்தியாவைச் செல்வமுடைய நாடாக்கியதாகச் சொல்லுகிறார்கள். இதனையுஞ் சிறிது ஆராய்வோம். சீர்திருந்திய ஆங்கில ஆளுகைக்குட்பட்டபின் பாரதகண்டம் பஞ்சத்தின் வாசஸ்தானமாக விருக்கின்றது. இந்துக்கள் இந்தியாவைப் பரிபாலித்தகாலத்தில் ஆயிரம் வருடங்கட்கிடையில் இந்தியாவிற் 11 முறை பஞ்சம் நேர்ந்திருக்கின்றது. மகமதியர் காலத்தில் 600 வருடங்கட்கிடையில் 17 முறை பஞ்சம் நேர்ந்திருக்கின்றது. ஆனால் ஆங்கிலர் பரிபாலனத்தில் 110 (1813-1923) வருடங்களுக்கிடையில் 67 முறை பஞ்சம் நிகழ்ந்திருக்கின்றது. இந்தப் பஞ்சகாலங்களில் ஐந்தேமுக்காற்கோடி சனங்கள் பஞ்சத்தால் மாண்டனர்.

இந்தவிதமாக ஒவ்வொரு விஷயத்தையும் ஆராய்ந்துகொண்டு போவோமானால் இந்தியாவில் ஆங்கில ஆளுகை வாய்க்கவில்லையென்பதும், ஆங்கிலர் பிரசைகளுக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்யத் தவறிவிட்டனரென்பதும் நன்கு விளங்கும். இவற்றைக் கண்டே இந்துக்களாகிய நாங்கள் மகாத்மா காந்தியைத் தலைவராகக்கொண்டு இந்திய சுவராச்சியத்தின்பொருட்டு உழைக்க முயல்கின்றேம். யானும் ஒரு தமிழன் என்றமுறைபற்றி, தமிழ்ச் சகோதர சகோதரிகளாகிய உங்களையும் பாரதமாதாவின் ஈடேற்றத்தின்பொருட்டு உழைத்தற்குத் துணைபுரியும்படி கேட்கின்றேன். நாங்கள் எல்லோரும் ஒத்துழைத்து எங்கள் மூதாதைகளின் கீர்த்திப்பிரதாபமான உந்நதநிலையை யடைவோமாக.

## சமாசாரம்.

காலநிலை:—சென்ற சனிக்கிழமை தொடக்கம் குளிரோடு கூடிய கடுங்காற்று வீசுகின்றது. சில தினங்களாக இடையிடையே மழைக்கோலங் காணப்படுகின்றது.

1000 ரூபாய் முத்திரை:-இம்முத்திரை விரைவிலே வெளிவருமென அறிகின்றேம். அதன் மாதிரி தற்போது வழங்கும் 10 ரூபாய் முத்திரையின் மாதிரிக்கொத்ததாயிருக்குமாம்.

யாழ்ப்பாணக் சுப்பிறீங்கோட்டுவிசாரணை: முதன்முதல் நீர்வேலிக் கொலைவழக்கு விளங்கப்பட்டது. இதில் நாகலிங்கம், தம்பிமுத்து என்னும் இருவர் மரணதண்டனை விதிக்கப்பெற்றனர். வேறு இருகுற்றவாளிகள் தனித்தனி ஆறுமாசச்சிறை விதிக்கப்பெற்றனர்.

இனுவில் வைத்தியசாலையும் அரசினர் உதவியும்:—இலங்கை அரசினர் இனுவில் வைத்தியசாலையில் அமைக்கப்படும் வைத்தாயர் விடுதிக்காக 12 500 ரூபா உபகரிக்கின்றனர். டிஸ்பென்சறிக்கட்டிடத்திற்கு 31,000 ரூபா வேண்டுமெனப் பகிரங்கவேலைப்பகுதியார் மதிப்பிட்டிருக்கின்றனர்.

பறங்கி வாலிபனின் பரிதாபமரணம்:-குருநாக்கல் புகையிரத ஸ்தானத்துக்கணித்தாய் 21 வயதுப் பறங்கிவாலிபனொருவன் தலைமண்டைக் கோச்சியினால் இரு துண்டாகநெரியுண்டிறந்து கிடக்கக்காணப்பட்டான். இது தற்கொலையா என்பது சந்தேகத்திற்கிடமாயிருக்கிறதாம். பொலிசார் விசாரணை செய்கின்றனர்.

ஜேர்மனிய புகைக்கப்பலில் துவக்கும் வெடிமருந்தும்:—சென்ற திங்கட்கிழமை கொழும்புத்துறைமுகத்துக்கு வந்த ஒரு ஜெர்மன் புகைக்கப்பலில் வெடிமருந்தும் துவகருக்களும் வைத்து அடைக்கப்பட்ட 19 பெரிய பெட்டிகள் மேற்படி துறைமுக அதிகாரிகளினாற் கண்டு எடுக்கப்பட்டன. அவைகள் விலாசமிடப்பட்டுள்ளன. பெட்டிகள் துறைமுக அதிகாரிகளினாற் கரை சேர்க்கப்பட்டன. கப்பல் அநிகிழ்த்திசைக்குப் பிரயாணமாயது.

## கடிதம்.

### "மாமிசபோசனம் மனிதற்கு இயற்கையுணவா"?

(முற்றொடர்).

இனிதாவர, மாமிசமென்னும் இரண்டினதுபாவமும் ஒன்றாயிருக்கவும் காய்கனிகளை மட்டும் அவரவர் இட்டம்போல் வெட்டிக்கொள்வதென்ன? ஆடு கோழி முதலியவற்றை வதை செய்வதற் கஞ்சிக் கொலையாளியைத் தேடிக் கூப்பிட்டழைப்பதென்னை? அங்ஙனம் கொலைசெய்து பழக்கமில்லைப்போலும். "புருசபக்ஷணம் மனிதர்க்கு இயற்கைஉணவு" என்ற கண்பரது கூற்றை ஆதரிக்கவிரும்புவோர் "புருஷமாமிசம் புலிக்கு இயற்கை உணவு" என்னும் எனது கூற்றையும் வெறுத்து நீக்கக்கூடாது. ஏனெனில் 'புலிபசித்தாற் புல்லைத் தின்னாது' என்பது ஓர்பழமொழி இதிலிருந்து புலியானது மாமிசபக்ஷணியோ என்பது சொல்லாமலேயே விளங்கும். அங்ஙனம் மாமிசத்தையே இயற்கையாயுண்ணும் அப்புலியானது தற்போது மனிதரையும் பிடித்துத் தின்னப் பழகிக்கொண்டதைச் சமீபத்து நடந்தேறிய சம்பவத்தாலறிவீர்கள். ஆகையால் அது புலிக்கு இயற்கையுணவா? அன்றிச் செயற்கையுணவா? என்பதுதான் எனது தாழ்மையான கேள்வி. செய்யற்கையுணவு என்பீரேல் அங்ஙனமே மனிதரும் மாமிசந்தின்னப்பழகிக்கொண்டனரென்றும், அதைநீக்கித் தாவரம் புசிப்பதுவே சுசீல முடைத்தென்றுஞ் சொல்வேன். அன்றி இயற்கையுணவென்பீராயின் அப்புலியைக் கூலிகொடுத்துக் கொல்வித்தலுங் கொடியபாவமே எனபேன்.

### "மாமிசபக்ஷணம் சுசீலவிரோதம்"

மாமிசம் புசிப்போரில்லத்தில் மருந்துக்குந் தானுஞ் சுத்தங்கிடையாது. மாமிசக் கடைகளில் அதை அருவருப்போடும் அவதானத்தோடும் கையாளுகிறார்கள். அவ்விதமே அதனைப் பெறுவோரும் அருவருப்புத்தோன்றக்கொண்டு சென்று அடுக்களைக்குக் குறிக்கப்பட்ட ஓரிடத்தில் வைத்து அரிந்தெடுக்கிறார்கள். அன்றியும் அதற்குரிய பாகபாத்திரங்கள் சட்டிவங்கள் வேறாகவும் அவற்றைத் தாவரபாகபாத்திரங்களோடு கலவாமையும் வைக்கப்படுகிறது. அது சமையல் அதைக்கேயன்றி தாவரவுணவைப் போல் மற்றும் அறைகளுக்குக்கொண்டுசெல்ல யோக்கியதையில்லாதிருக்கின்றது. உபவாசகாட்களிற் பாமரரும் அதனை அசுத்தமென்று கண்டு முற்றாய் நீக்கிவிடுகிறார்களென்றால் பின்னும் அதனுடைய அசுத்தத்தை இவ்வளவென்று விரித்துக் கூறவேண்டிய அவசியமில்லை.

### "மாமிசபக்ஷணி சர்வ சீவசத்துரு"

ஒரு சீவன் கொலையுண்பதற்கு ஏதுவாயிருப்பது மாமிசம் புசித்தலாகிய பழக்கமே. சிலர் கொலை செய்யாமல் பணங்கொடுத்து மாமிசம் பெறுவதால் அதனால் வரும் பாவம் எங்களைச் சாராதென்று குதர்க்கமாடுகிறார்கள். அது அவர்களது அறியாமையை விளக்கிக் காட்டுகிறது. மாமிசம் புசிப்பாரில்லையாயின் கொலை செய்வாருமில்லை யென்பதைச் சிந்திக்கிலர்போலும். கொல்வாரும் அங்ஙனமே தம்பாவத்தை யுண்பார் தலைமீதுமைத்துவிடுகின்றனர். ஆகையால் கொன்றவர் தின்றவர் கூறுபோட்டவர் அனைவரும் பாவத்தின் பங்காளராம் என்பதற் கோர் ஐயமின்றும். மாமிச பக்ஷணிகள் ஒருயிரைக் கொல்லவோ அன்றிக் கொல்லுவித்தற்கோ உடன்பட்டிருப்பதால், ஒரு சீவனிலாவது ஈகை, இரக்கம், தயை, தாக்ஷிணியம், அன்பு என்னும் ஒரு பொருட்சொல்லாகிய சீவகாருண்ணியத்தைக் கடைப்பிடித்தல் முடியாது. ஏனெனில், உண்பொருட்டுக் கோழியைக் கொல்பவர் ஆட்டினிடத்தும் ஆட்டைக் கொல்பவர் மாட்டினிடத்தும் மாட்டைக் கொல்பவர் குதிரையினிடத்தும குதிரையைக் கொல்பவர் பன்றியினிடத்தும் பன்றியைக் கொல்பவர் பூனையினிடத்தும் இன்னும் எதை விரும்பிக் கொல்லுகிறார்களோ அதைவிட்டு விரும்பப்படாத பிறசீவன்களில் மிகவும் தயாளுவைச் சிலர்போல் நடித்து இரக்கங்காட்டுகின்றனர். ஆனால் அவையெல்லாம் புசித்துப் பழகாத தடையேயன்றி உண்மையில் சீவகாருண்ணியத்தை நாடியன்று.

### "மாமிச பக்ஷணி முகமன்சொல் மித்திரு"

மற்றும் ஓர் சாரார் சீவகாருண்யம் என்பதை மனிதருக்கு மனிதரேயன்றி மனிதருக்குணவாகும் மிருகத்தினிடங் காட்டவேண்டியதில்லை என்கிறார்கள். ஆ! மானிடனே, என்னைப்போல் நீ; உன்னைப்போல் நான். நடக்கக் காலும், காணக் கண்ணும், பேச வாயும், கேட்கச் செவியும், செய்யக் கரமும், இன்னும் அறிவு, ஆக்கம் ஆகிய சகல சுதந்திரமும் எனக்குஞ் சரிவரப் பங்கிட்டீந்த சர்வேச்சுரன் உனக்குளன்? ஏ மானுடனே! மூவாசை மதுவுண்டு மயக்குற்ற வண்டனைய ஒருவர்பாலொருவர் இரக்கங்காட்டவென்னும் நினைவு அகங்காரந்தான் எம்மட்டு? உம்மைப்போல் யானும் பிறரும் பலவேறு தந்திர மந்திர வுபாயங்களிற் சிறிது குறைந்திருந்தாலன்றோ எம்மில் நீர் இரக்கங் காட்டலாம்? ஆகையால் குருடனுக்குக் குருடன் வழிகாட்டியவாறு மனிதரில் இரக்கங் காட்டுகிறேன் என்னும் முகமன் கூறுதலைவிட்டுப் பஞ்ச அறிவுடைய பசு பட்சியினிடம் பகுத்தறிவுடைய மனிதனே இரக்கங் காட்டக்கடவாய்.

### "மாமிச பக்ஷணம் ஐம்புல வெறுப்பு".

செவியானது ஓர் சீவனைக் கொல்லும்போது எழும் பரிதாபக் கூக்குரலை வெறுக்கின்றது. மாமிசத் துண்டம் நளுநொளுவென்று செந்நீர் வடிந்து சிதம்பிக் குளிர்வதால் மெய்யுந் தொடவோ சிலிர்க்கின்றது. பச்சைப்புலாற் சுவை நீங்கப் பதமிட்ட ஞான்றும் அறுசுவையறியுந் திருநாவுக்கு அசுத்த மீனிறைச்சி அருவருப்பாகும். திருவுருஅறியும்:இருநேத்திரமும் மாமிசத்துண்டத்தை அறுபட்ட புண்ணென அவமதித்தகற்றும், நறுமணமறியும் நாசியோவென்றால் சுசியிலாவூனைத் துர்மணமென்று தூரவே நீக்கும். ஆகவே புலனைந்தும் வெறுத்திடுந் பொல்லாமனமுஞ் செல்லாதாங்கே.

### முடிவுரை.

பகுத்தறிவுடைய மக்களாய்ப் பிறந்த நாம் செந்நெறிநின்று சிறப்பெய்த வேண்டிச் சிவனருட் கடாட்சம் பெற்ற மகான்கள் நன்று இதென அநுபவத்தாற் கண்ட இரகசியங்களை அன்பின் மிகுதியால் திருவாய்மலர்ந்தனர். அவ்வுண்மைச் சாத்திரங்களின் விதிவழிநின்றே புருடார்த்த நான்கும் பெறுகின்றனர். அன்றிச் சாமாந்ய மனிதர் சுயேச்சையாய் எடுத்துக்காட்டும் உண்மைவிளக்கம் யாதொன்றுமில்லை. வெற்றிலையையும் பாக்கையும் மென்று சுண்ணமிட்டாற்றான் சிவக்குமென்ற இரகசியமும் அன்னார் காட்டியதேயாகும். சமீபத்தில் உலகத்தை உய்விக்கவெழுந்த கண்ணுற் கண்ட கடவுளாய் மதிக்கும் காந்தியடிகளும், அஹிம்சா விரதத்தை ஆதரியுங்களென்று அறையும் பேரிகை இந்த அவனி எண்டிசையுமறியாதிராது. அன்றியும் உயிரைக்கொன்று உடலை வளர்க்க விதியுளதென்று வேதாகமங்களிலுமில்லை; பலகலையாய்ந்த எவரும் பகர்ந்ததுமில்லை. ஆகவே ஆப்தர்களின் திருவாக்கை அவலமாக்கி அதனை மாற்றியோ அன்றி முற்றும் நீக்கியோ தாமாயொன்றைச் சிருட்டித்துக் கூறுவாராயின் உருவிலாதின்று மனிதரை வருத்தும் பேய்க்கூட்டத்தி லொன்றாகவே மதிக்கப்படும்.

கொலையாதி நெறியகன்ற ஞானந்தானே
கூறரிய மேலான ஞானமாகும்
கொலையாதி யகன்றொழுகுந் தவங்கடாமே
குற்றமிலா நற்றவமென் றுரைக்குநூலுங்
கொலையாதி யகற்றியநல் லறங்கடாமே
குவலயத்தி லொப்பரிய வறங்களாகுங்
கொலையாதி யகன்றுபெறுஞ் செல்வந்தானே
கூறிதுயிர்க் கிதமான வாழ்வதாமே.

எவ்வுயிரும் பராபரன் சந்நிதிய தாகும்
இலங்குமுயி ருடலனைத்து மீசன்கோயில்
எவ்வுயிரு மெம்முயிர்போ லென்றுநோக்கி
யிரங்காது கொன்றருந்து மிழிஞரை
வல்வியம தூதருந் தண்டஞ்செய்து
வல்லிரும்பை யுருக்கியவர் வாயில் வார்த்து
வெவ்வியதீ யெழுநரகில் வீழ்த்தி மாறு
வேதனைசெய் திடுவரென வோதுநூலே.

சுபம்! [சிவஞானதீபம்]

கா. க. தனபாலன்.

## ஒரு சந்தேகம்.

(ஓர் ஆராய்ச்சி விநோதன் எழுதியது.)

### "மருதமடுத் திருப்பதி வரலாறு"

என முகவுரையிட்டெழுதிய கடிதமொன்று தேசாபிமானி சென்ற 46-ம் இதழில் வெளியாயிருக்கிறது. கடிதர் "மருதமடுவிற் பூசிக்கப்படும் திருச் சுருபம் ... கன்னி மரியம்மாளின் சுருபமே என்றதற்கும், மருதமடு ஆலயம் ஆதிதொட்டுக் கத்தோலிக்க ஆலயமே என்றதற்கும் இம்மியளவாவது சந்தேகமில்லை" என்று கூறுகிறார்.

மருதமடு ஆலயம் ஆதிகாலத்தில் கண்ணகியம்மன்கோயில் என்றும், அது இலங்கைக் கயவாகு அரசன் காலத்தில் அவனது பெருவிருப்பின்படி கட்டுவிக்கப்பட்டதென்றும், பின்னர் சைவர்களுக்குப் பேரிடர் விளைத்துச் சைவாலயங்களை யழித்தலைத் தமக்கு இன்பமாகக்கொண்டொழுகிய குறுகிய நோக்கமுடைய பறங்கியர் காலத்தில் அது அழிந்துக் கத்தோலிக்க ஆலயமாக்கப்பட்டதென்றும் வழங்கும் கர்ணபரம்பரை பெருவழக்கிலிருக்கின்றது.

கயவாகு அரசன் இலங்கையில் கண்ணகியென்னும் பத்தினித் தெய்வத்திற்குக் கோயில் கட்டுவித்து நித்தியபூசை விழா முதலியன செய்து வழிபட அதனால் நாடு மிகுந்த வளமுற்றது என்பது சிலப்பதிகார அடிகளாற் பெறப்படும். இனி, சைவர்களுக்கு உரிய தெய்வப் பழம் பதிகளைத் தம்வசமாக்கிக் கொள்ளுதலில் கத்தோலிக்கர் பெரிதும் ஆர்வமுடையர் என்பதற்கு இலங்கையில் தேவாரம் பெற்ற இரண்டு தலங்களி லொன்றாகிய திருக்கேதீச்சரம் என்னும் பழைய சிவக்ஷேத்திரத்தைத் தாம் பெற்றுவிடவேண்டும் என்னும் பேராசையினாற் றூண்டப்பட்டு அதற்காக அவர்கள் செய்த பெரு முயற்சி உலகமறியாததல்லவே. மூன்றாவதாக, உலகத்திலுள்ள சமயங்களெவற்றினும் மிக மேலாகிய சைவசமயத்திலுள்ளோர் பிறிதொரு சமயத் தெய்வத்தை வழிபடும் ஒழுக்கமுடையோ ரல்லராகவும் ஆங்குச் சென்று வழிபட்டுவரும்வழக்கத்தை யோசிக்கின் அவர்களுக்கும் அத்தலத்திற்கும் யாதோ பூர்வ சம்பந்த மொன் றிருத்தல்வேண்டுமென்று கருத இடந்தருகிறது.

இவ்வேதுக்களைக் கொண்டே மருதமடு ஆதியில் சைவாலயமாகவே இருந்தது என்பதைச் சாதிக்க நினைத்தோமில்லை. பின்னை மேற்கூறிய கர்ண பரம்பரைக் கொள்கை உண்மையாதலுங் கூடும் என்பதற்கும், வரலாறு எழுதியவர் மருதமடு ஆலயம் ஆதிதொட்டுக் கத்தோலிக்க ஆலயமே என்றதற்கு இம்மியளவாவது சந்தேகமில்லை யென்று கூறியது பொருத்தமற்றதாய், அது சந்தேகநிலையிலேயே இருக்கின்றதென்பதற்கும் ஏதுவாக இவற்றைக் குறிப்பித்தோம்.

மேலும், திருக்கேதீச்சரத்திற்கு அணித்தாயுள்ள காட்டினுள் ஓர் கோயிற் கட்டடம் அழிந்தொழிந்து கிடக்கின்றது. அது மிகப் பழையகாலத்ததாகிய ஓர் அம்மன்கோயிலென்றும், சைவ விரோதிகளாயுள்ள பறங்கியரால் அக்கோயில் பாழ்படுத்தப்பட்டதென்றும், அவர்களது கொடுங்கோன்மைக்குப் பயந்து கத்தோலிக்க வேடத்துடன் மறைந்தொழுகிய சைவர்கள் அவ்வம்மன்விக்கிரகத்தை மறைத்து வைத்திருந்து பின் அதையும் உடன்கொண்டு பறங்கியராற் கத்தோலிக்கவாலயமாக்கப்பட்ட மருதமடுக் கண்ணகியம்மன்கோயிற் பக்கஞ் சென்று குடியேறினார்கள் என்றும், காலகதியிற் குடிகளுமழிந்து ஊரும் பாழடைந்துபோகப் பின்னோர்காலத்தில் கத்தோலிக்கர் அங்கு கோயில் வகுத்தார்கள் என்றும் ஓர் கதை நிகழ்கின்றது. இக்கதையைச் சிறிது மாறுபடுத்தியுங் கூறுவர். அஃதாவது எல்லோரும் கத்தோலிக்க சமயத்தைத் தழுவவேண்டுமென்று பறங்கியராற் துன்புறுத்தப்பட்ட சனங்கள், அரசினரை ஏமாற்றுதற்காகத் தாமும் கத்தோலிக்கரைப்போல வேடமிட்டு மருதமடு ஆலயத்தையும் இதற்கிசைய அமைத்துப் பழைய அம்மன் விக்கிரகத்தை மறைத்து வைத்து வழிபட்டு வந்தார்களென்றும், மற்றவை முன்போல.

பிற்காலத்தில் ஆலயஞ் சமைத்த கத்தோலிக்கர் பழைய அம்மன் விக்கிரகங்களை நிலத்திலுட் புதைத்தோ அல்லது சுவரினுள் வைத்துக்கட்டியோ மறைத்துவிட்டார்கள் என்றுங் கூறுவர்.

உண்மையை உள்ளவாறு ஆராயும் இயல்புடைய நடுநிலைமையாளர் வேறுமுடிபிற்கு வருதலுங் கூடும்.

பிரசித்த வழக்கிலிருக்கும் கர்ணபரம்பரைக் கொள்கை பிறிதொன்றன் சார்புபற்றி எளிதிற் றள்ளப்படுவதன்று. அதற்கு மாறுபட்ட கொள்கையென்று தக்க ஆதாரத்துடன் நிலைபெறுமாயின் கொள்ளுதலும் சாலாது. உண்மை யறியும் விருப்புடையோர் வேறு பலர் இருப்பார்களாதலால், எவ்வித முடிபாயினும் ஆராய்ந்து தக்க ஆதாரத்தோடு இப்பத்திரிகை மூலமாக வெளியிடுதல் தக்கோர் கடன். ஆராய்ச்சியாளர்க்கு மேற் குறிப்பித்தவை பயன்படுவனவாகும்.

## பத்திரிகாபிமானிகள் தங்களால் வரவேண்டிய பத்திரக் கிரயத்தைத் தயைசெய்து காலதாமசமின்றி அனுப்பிவைப்பார்களாக.

## தேக்க மரம்.

றங்கூனிலுள்ள பேர்போன அங்கிள கொம்பனியாரிடமிருந்து புதிசாக வருவிக்கப்பெற்றதிறமான தேக்கமரங்கள். நீளம் 6 அடி தொடக்கம் 30 அடி வரையிலுள்ளன. கனம் 12 அங்குலம் தொடக்கம் 20 அங்குலம் வரையிலுள்ளன. இவை தொண்டமானாற்றிலும், யாழ்ப்பாணம் பெரிய கடையிலுள்ள எமது கிட்டங்கி வளவிலும் பெற்றுக்கொள்ளலாம். விலை விபரத்திற்கு எமக்கெழுதவும்.

S. வீரகத்திப்பிள்ளை,
தொண்டமானாறு.

தந்திவிலாசம்:—
நாபி, வல்லுவெட்டித்துறை.
(H. 29.)

## திறமான மங்களூர் ஓடுகள்

மெஸ்சேர்ஸ் மோர்க்கன் அன்கோ அல்வாரிஸ் அன்கோ திறமோடுகளும் அரையோடுகள், முகட்டோடுகள், காற்றோடுகள், பீலியோடுகள், கண்ணாடியோடுகள், சித்திர சகிதமான ஓடுகள் தளவரிசைக்கற்கள், பூச்சட்டிகள் திறம் போட்லாந்து சிமெந்து முதலானவைகளும் சகாயமான விலைக்குப் பின்வரும் விலாசத்தாரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

கா. வ. சுப்பிரமணியம்,
ஓட்டுக்கம்பெனி,
தேவரீர்குளம்,
யாழ்ப்பாணம்.
(H. 23).

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1892-ம் ஆண்டின் 8-ம் இலக்கச் சட்டவிச்சட்டத்தின்படி லைசென்சு பெற்று அடைவு பிடிக்கும் வண் கிழக்கு மு. ம. வீ. அ. சி. முத்துவயிருப்பிள்ளையிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி டிை சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கவேண்டிய நகைகளின் விபரம்:—

| நம். | மீ | உ | ரு. | ஊர் பெயர் | நகை விபரம். |
|---|---|---|---|---|---|
| | 1923ஆ | | | | |
| 1998 | ஜெனவரி. | 15 | 45 | மானிப்பாய் வீரகத்தி காசி, | பொன் டிம்மியுடன் மேற்படி கம்பிப்பூராணட்டியல் 1 |
| 2040 | டிை | 31 | 55 | புங்குடுதீவு மேற்கு சின்னத்தம்பி அப்பாபிள்ளை, | இருகிஸ்லாத பொன் கம்பிப்பூராணட்டியல் 1 |
| 2091 | பிபர்வரி | 16 | 35 | தாவடி கார்த்திகேஸ் வேலுப்பிள்ளை, | பொன்தாயித்துடன் மேற்படி குண்டுச் சங்கிலி 1 |
| 2175 | மே | 2 | 25 | சுந்தர்மடம் சுந்தர் சின்னத்தம்பி, | பொன் சாதா மோதிரம் 2 |
| 2213 | ஜூன் | 8 | 15 | வேலணை கிழக்கு ஆறுமுகம் குழந்தைவேலு, | பொன் பின்கோர்க்கி 1ம் நாட்டுக் கடுக்கன் சோடி 1 |

விற்பனவு:—இரத்தாக்ஷிஞு ஆடிமீ 4-ந்திகதிக்குச் சரியான 1924ஆ ஜூலைமீ 19உ சனிக்கிழமை முற்பகல் 10மணி தொடக்கம் எடுபட்ட நகை பிறீங்கலாக மிகுதி டிை கடையில் பிரசித்த ஏலத்திற் கூறி விற்கப்படும்.

அரு. செல்லையா உடையார்,
வெங்தீஸ்மேஸ்தர்.
(Mis. 509)

அநேகபரிசுகள், மெடல்கள், நற்சாக்ஷிகள் பெற்று உலகெங்கும் புகழ்பெற்றது.

25—8—1923-ல் சென்னையில்நடந்த தமிழ்வைத்தியகான்பரன்ஸ் அண்டுமருந்துக்கண்காக்ஷியில் பஸ்கிளாஸ்(முதல்தர)தேவஒளஷதங்களெனத் தங்கமெடலும், வைத்தியபதிப்பட்டமும்பெற்ற

உலகம் புகழ்வது.




உள்ளநாளும் மறவாதது.

## மகா வீரிய தங்க பஸ்பம்.

☞வீரிய விர்த்தியில் மன்மதனுக் கோப்பாவர்.

பரீட்சைக்கும் பலனுக்கும் உத்திரவாதம்.

இதை 1, ½ மண்டலம் சாப்பிட சகலவியாதியும் நீங்கி அபார வீரவிர்த்தியும், பசியும், ரத்தவிர்த்தியும் உண்டாகும். இது எல்லா மருந்துகளுக்கும் மேலானது. ஒரு முறைபரீக்ஷித்தால் உள்ளநாளும் மறவாதது. இது பிரபுக்களுக்கானது. இதன் அபார சக்தி உபயோகித்தவர்களுக்கே விளங்கும். இது வெகு சீக்கிரத்தில் வீரியத்தையும் பலத்தையும் கொடுத்து இழந்த ஆண்மைத்தனம் முழுவதும் திரும்ப உண்டாக்குகிறது. வெள்ளை, வெட்டை, பவுந்திரம், மூலம், நீரழிவு, க்ஷயம், இருமல், கபக்கட்டு, குன்மம், கருமேகம், சூலை முதலிய சகல சர்ம வியாதிகளும் நீங்கும். பத்தியமில்லை.

1-மண்டலம் 48-நாள் பஸ்பம் ரூபா 20, அரைமண்டலம் 24-நாள் பஸ்பம் ரூபா 10.

### குருநாக பஸ்பம்-மூலத்திற்கு.

ஆப்ரேஷன் அவசியமில்லை. மூளை தானே கரையும். சீழ்மூலம், ரத்தமூலம், குத்தல், மூலமுளை, மலபந்தம் முதலிய மூலம் ஒன்பதும் அதிசீக்கிரம் குணமாகும். உத்திரவாதமுள்ள சிறந்த ஒளஷதம். புட்டி ஒன்றுக்கு ரூபா 4—0—0.

### குருதாளக பஸ்பம்-இருமலுக்கு.

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு; இருமல் கட்டசுவாசம், கோளை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயிருந்தாலும் சரி 8-வித காசமும் அவசியம் தீரும். அனுபவத்தில் கைகண்டது. புட்டி ஒன்றுக்கு ரூபா 4.

### கெர்ப்ப எண்ணை.

இது ஸ்திரீகள் சஞ்சீவி என்னலாம். மாதாந்திர வயிற்றுவலியை உடனே நிறுத்தும். சரியாய் பஹிஷ்டையாகும். கெர்ப்பாசயம், சினைப்பை இவற்றிலுள்ள சகலகெடுதல்களும் நீங்கி கெர்ப்பமுண்டாகும் மிக்க அநுபவமானது. புட்டி ஒன்றுக்கு விலை ரூபா 2.

### மாந்திரீக சத்து.

இதை அணிந்துகொண்டால் சகலவசியம், நினைத்தகாரியசித்தி, தனலாபம், புத்திரசந்தானம், தெய்வதுணை உண்டாகும். செய்வினை, பேய், பிசாசு, குழந்தைகளின் பிணி முதலியன நீங்கும். சத்து 1-க்கு ரூபா 2—0—0. 6-சத்து ரூபா 10—0—0.

**ரோம சங்காரி** ஐந்தே நிமிஷத்தில் ரோமத்தை நீக்கும். எரியாது தோல் கெடாது. புட்டி 1-க்கு அணு 8.

### சர்வபடை நிவாரணி

சகலமேகப்படை, ஊரல், பூச்சிகடி, வண்டுகடி, படர்தாமரை இவைகள்ஒரேநாளில் உதிர்ந்துவிடும் உடனே அரிப்பு நிற்கும் தோல் கெடாது. புட்டி 1-க்கு விலை அணு 8.

### பிரமேக நிவாரணி.

நாட்பட்ட பிரமேகம், தந்திமேகம், வெள்ளை, வெட்டை, நீர்சுருக்கு, எரிச்சல், குத்தல் உடனே நிற்கும். நிச்சயமாய் 3-வேளையில் தீரும் தவறாது. புட்டி ஒன்றுக்கு விலை ரூபா 2.

வி. பி. சார்ஜ் வேறு.

சித்த ஆயுள்வேத டாக்டர்,
சி. மலையப்பசாமிப்பிள்ளை,
நித்தியானந்த மெடிகல் ஹால், பழனி.
(Q. (B) 46)

இனும்! இனும்!! இனும்!!!

இதனடியில் கண்ட மருந்து வாங்குகிறவர்களுக்கு மட்டில்

வைத்திய சாஸ்திரத்தில் அதிக அனுபவமுள்ள ஹக்கீம் K. முகம்மது யூசுபு அவர்களால் செய்யப்பட்ட (வைத்திய சாஸ்திர நீதிநூல்) 96 பக்கம் அடங்கிய புஸ்தகம் ஒன்று இம்மருந்துடன் இனாமாக அனுப்பப்படும். மானிட சரீரத்தில் பரவும் பல நோய்கள் வீரியபலஹீனங்கள் நரம்புத் தளர்ச்சிகள் வீரிய நஷ்டத்தின் விபரங்கள் அது ஜனித்த காரணங்களையும் அதன் குணங் குறிகளையும் அதற்கு மருந்தும் பரிகாரமும் சரீரத்தில் உள்ள சில ரகசியமான விஷயங்களையும் வைத்தியரிடம் வெளிப்படுத்தாமல் தனக்குத் தானே அறிந்துகொள்ளக்கூடிய அருமையானதோர் சாஸ்திரமாயிருக்கின்றது.

அவுஷதங்களில் அருமையான வித்தை.

ஜெகப்பிரசித்தி பெற்ற

## சிட்டுக்குருவி அமிர்த லேகியம்.

பலமில்லாமல் தளர்ந்து சோர்வடைந்த நரம்புகளையும் உலக வாழ்க்கையில் பிரியமில்லாமல் சஞ்சலப்படும் மனதையும் ஒருவேளை லேகியம் சாப்பிட்ட பிறகு ஆச்சரியப்படும்படி நரம்புகளுக்குப் பலமும் திமிரும் உண்டாக்கும்.

பரீட்சைக்கும் பலனுக்கும் உத்திரவாதமுள்ள உண்மை அவுஷதம் குணமில்லையென்று ரூபிக்கிறவர்களுக்கு பணத்தைத் திருப்பிக் கொடுக்கப்படும்.

வீரியபுஷ்டியையும் மன உற்சாகத்தையும் கொடுப்பதில் இதற்குச் சமமாய் எதைக் காட்ட முடியும். இதனை அனுபவித்தவர்கள் இப்பெருமை தங்கிய மருந்திற்கு உள்ள அபூர்வசக்தியைப் போலே இவ்வுலகத்தில் வேறு எந்த மருந்திற்கும் இல்லையென்று அனேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் எழுதியிருக்கிறார்கள்.

அன்பனே! இதுவரையிலும் வீரியதத்துவத்திற்காகவும் நாடி நரம்புகளின் உற்சாகத்திற்காகவும் மூளையைப் பலப்படுத்தி ஞாபகசத்தியை விர்த்திசெய்யவும் தேககாங்கையினால் நீற்றுப்போகும் பலஹீனம் பற்பல வாய்வுரோகம் இடுப்புவலி கைகாலசதி மலச்சிக்கல் பசிமந்தம் இவைகளுக்கெல்லாம் எத்தனையோ விதமான அவுஷதங்கள் சாப்பிட்டிருப்பீர்கள். அவைகளுக்கெல்லாம் இது முதல்தரமான மருந்தென்று தங்களின் சிநேகிதர்பால் புகழ்ந்து பேசுவீர்கள். பத்தியமில்லை.

முக்கிய கவனிப்பு:—சில போலி சிட்டுக்குருவி லேகியங்கள் ஆயிரக்கணக்கான ரூபாய் இனுமென்று சபதங்கள் கூறிக்கொண்டு பல விளம்பரங்கள் வெளிவந்துகொண்டிருக்கிறபடியால் எமது விலாசத்தைக் கவனித்து ஆடர் செய்யவேணும்.

| | | | |
|---|---|---|---|
| 40 நாள் | 80 வேளை | டப்பி 1க்கு விலை ரூபா | 10—0—0 |
| 20 ,, | 40 | ,, ,, ,, ,, | 5—0—0 |
| 10 ,, | 20 | ,, ,, ,, ,, | 2—8—0. |

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

இந்தியா, பர்மா, சிலோன் இம்மூன்று தேசங்களுக்கும் வி. பி. யில் மருந்து அனுப்புவோம். பினங்கு, சிங்கப்பூர், மற்ற மலாய் தேச வாசிகள் மருந்தின் கிரயமும், பார்சல் செலவு ரூபா 2ம் சேர்த்து முன்பணம் அனுப்பினுல் மட்டில் மருந்து அனுப்பப்படும்.

விலாசம்.

ஹக்கீம் கா. முகம்மது யூசுபு,
முகம்மதியா வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை, (தென்னாற்காடு ஜில்லா)

Hakeem K. Mohamed Yoosoof,
*Mohamedia Medical Hall,*
Porto-Novo, S. A. Dt. (INDIA.)
(H. 27.)

உங்கள் குழந்தைகளுக்கு

## லக்ரோஜின்

என்னும்

இயற்கையான பாலுணவை ஊட்டி நன்மையடையுங்கள்.

இந்தப் பாலுணவே முலைப்பாலுக்குச் சமானமானது.

இது தசையையும் என்புகளையும் விருத்தி செய்யும் சக்திவாய்ந்தது.

இந்த உணவை உண்டு வளர்ந்த குழந்தைகள் இறுக்கமான தசைநார்களும் அரோகதிடகாத்திரமு முடையவர்களாய் இருக்கிறார்கள்.

## லக்ரோஜின்

சவலைகளைப் பராக்கிரம முடையவராக்கும்.

இந்த உணவை இலங்கையிலுள்ள ஒளஷதசாலைகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்படி இடங்களில் கிடைக்காவிடில் நேரே எங்களுக்கு எழுதுங்கள்.

மாதிரி லக்ரோஜின் உணவும் அதின் விபரங்களடங்கிய புத்தகமும் உடனே அனுப்பப்படும்.

பிறீ கூப்பன்.
.H .O

நெஸ்லின் & அங்கிளோ சுவிஸ்
கொன்டேன்ஸ்ட் மில்க் கோ.,
தபாற்பெட்டி, 189,
கொழும்பு.

தயவுசெய்து உங்கள் அரிய புத்தகத்தில் (Baby Book) ஒன்றும், மாதிரி லக்ரோஜின் உணவும் கிரயமின்றி அனுப்பவும்.

பெயர்:— ..........................................

விலாசம்:— ..........................................

(Q. 49.)


வான்முகில் வழாது பெய்கமலிவளஞ் சுரக்கமன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and published by S. Ampikaipagan, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.